<u>2025 டிசம்பர் மாதம் 02 – ஆம் தேதி செவ்வாய்கிழமை</u>

<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>

<u>எம் .சி .ஓ .பி. நெம்பர் : 155/2021</u>

2025–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 02 – ஆம் தேதி செவ்வாய்கிழமை மனுதாரர் தரப்பு சாட்சியாகிய PW2 நபரின் வாக்கு மூலம்

<u>(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி)</u> திருமதி.C.லதா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW2 – சுதாகர் |
| தந்தை பெயர்: | செல்லையா |
| ஊர்: | அம்மச்சியாபுரம் |
| வட்டம்: | ஆண்டிபட்டி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | சொட்டுநீர் பாசன வேலை |
| வயது : | 47 |

<u>தேதி : 02.12.2025.</u>

<u>முதல் விசாரணை: –</u>

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பு கூடுதல் சாட்சியாவேன். மனு விபரங்கள் குறித்து நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை என் சாட்சியமாக ஏற்க வேண்டுகின்றேன். எனது தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. மனுதாரர் மனுவில் கோரியவாறு மனுப்படி உத்தரவாக வேண்டி பிரார்த்திக்கிறேன்.

<u>3 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>:–

விபத்தில் இறந்துபோன நபர் அய்யர் ஆவார். விபத்தில் இறந்துபோன நபர் எனக்கு 5, 6 வருடங்களாக பழக்கம். விபத்து நடந்து ஒரு வாரம் கழித்து என்னை போலீசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துக்கொண்டார்கள். விபத்து அரண்மனைப்புதூர் டூ கொடுவிலார்பட்டி செல்லும் சாலையில் வைகை ஆற்றுப்பாலத்திற்கு முன்னால் விபத்து நடந்தது. விபத்து சமயத்தில் பாலம் ஆரம்பிக்கும் இடத்திலும், முடியும் இடத்திலும் வேகத்தடை இருந்தது என்றால் விபத்து சமயத்தில் இல்லை, விபத்து சமயத்திலும், தற்போதும் வேகத்தடை இருந்தது என்றும் சொன்னால் சரியல்ல. ஜெயப்பிரகாஷ் இருச்சக்கர வாகனத்தில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று கீழே விழுந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். ஜெயப்பிரகாஷும், அய்யரும் விபத்து சமயத்தில் தலைகவசம் அணிந்திருந்தார்களா என்றால் நான் கவனிக்கவில்லை. மனுதாரர் சொல்லி சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன். இருச்சக்கர வாகனம் யாருக்குப் பாத்தியப்பட்டது என்ற விபரமும், அந்த இருச்சக்கர வாகனத்தை ஓட்டிய ஜெயப்பிரகாஷுக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. விபத்து சமயம் மாலை 5.30 மணி இருக்கும். நிரூபணவாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நான் படித்துப்பார்த்து தான் கையொப்பம் செய்துள்ளேன். அய்யர் வீட்டிற்கு மாலை 6.00 மணிக்கு நான் தான் தகவல் சொன்னேன். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும், மனுதாரர் கேட்டுக்கொண்டதற்காக இறந்துபோனவருக்கு சாதகமாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>:-**

2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகாததால் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தன்னிச்சையாக முடித்து வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 02.12.2025 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Exhibit A7-PW1 in OS-148/2023 02-12-2025
Digitally signed by SANKAR
Date: 2025.12.02 18:38:13 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
02.12.2025